# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 203/மா/2017

ஆணை எண். 287/2017

நாள் : 18/12/2017

திரு P. கலியபெருமாள்,
தஞ்சாவூர்.

– முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர்.

– எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாநகராட்சி, வடக்கு வாசல், 135/A-16, AYA நாடார் சாலையில் வசிக்கும் திரு P.கலியபெருமாள் என்பவரின் 14.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2017 அன்று பெறப்பட்டு 203/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர் மாநகராட்சி, வடக்கு வாசல், 135/A-16, AYA நாடார் சாலையில் வசிக்கும் திரு P.கலியபெருமாள் என்பவர் தஞ்சாவூர் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிய தான் 30.06.2016 அன்று பணியிலிருந்து வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றுவிட்டதாகவும், எனினும் தனக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும், உரிய காலத்தில் தனக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்படாததற்கு மாநகராட்சியின் பி–2 எழுத்தரின் எதிர்பார்ப்பே எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. மாநகராட்சி ஆணையரின் அறிக்கையினை பரிசீலனை செய்ததில், 04.10.2017 நாளிட்ட மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை எண்.11204/பி2/2017–இல் மனுதாரருக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதியப் பலன்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி செயல்முறை ஆணை 04.10.2017 அன்று கண்காணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டுள்ளது. 04.10.2017 நாளன்றே ஓய்வூதியப் பலன்களுக்கான ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில் முறையீட்டு மனுதாரர் தனக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்பட வில்லை என தனது 14.10.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். இதே போன்று ஓய்வு பெற்ற துப்புரவுப் பணியாளர் திருமதி S. சுப்பம்மாள் என்பவரிடமிருந்தும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். இந்நேர்வில் மனுதாரர் திரு S.கலியபெருமாள் என்பவரும், மற்றொரு நேர்வில் மனுதாரர் திருமதி S. சுப்பம்மாள் என்பவரும் மனுக்கள் எழுதித் தரும் நபருக்கு கைப்பாவையாக செயல்பட்டு வருவதாக அவர்கள் தாக்கல் செய்த முறையீட்டு மனுவிலிருந்து அறிய முடிகிறது. எனவே, ஓய்வு பெற்ற துப்புரவுப் பணியாளர்கள் தன் பிழைப்பிற்காக மனுக்கள் எழுதித் தரும் நபர்களிடம் ஏமாறாமல் இருக்க உரிய அறிவுரைகளை அவர்களுக்கு மாநகராட்சி வழங்குவது அவசியம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், இந்நேர்வு சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்கி 04.10.2017 நாளிட்ட செயல்முறையில் மாநகராட்சி ஆணையர் ஆணை வழங்கிய நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்து வைக்கலாம் எனக் கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு P. கலியபெருமாள்,
   வடக்கு வாசல்,
   135/A–16 AYA நாடார் சாலை,
   தஞ்சாவூர் – 613 006.

2. மாநகராட்சி ஆணையர்,
   தஞ்சாவூர் மாநகராட்சி,
   தஞ்சாவூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்